**மண்முனைப் பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்பிரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் மண்முனைப் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படவேண்டும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி ஒழுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதிவரை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 11 வட்டாரங்களில் ஒரு வட்டார பகுதியில் உள்ள ஆதனங்களின் மீதான நிலுவை வீத வரி ரூபா 86,360 தொகையாக கணிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், பிரதேச சபையினால் சமார்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டில் நிலுவை வீத வரிகள் முறையாக கணிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாது நிலுவை | நிலுவை வீத வரிகள் பதிவேடுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவேண்டும் | குறிப்பிட்ட நிலுவை வீத வரியான ரூபா 86,360.00 வெற்றுக்காணிக்குரியதாகும். குறித்த வெற்றுக்காணிக்குரிய உரிமையாளர்களை இனங்கண்டு வரியை அறவிடுவது சிரமமாக உள்ளபடியால் இந்நிலுவை பதிவேடுகளில் காணப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| பூச்சியமாக காட்டப்பட்டுள்ளது. | | |
| (ஆ) முத்திரை தீர்வையானது பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 121,000 தொகை கணக்காய்வுத் திகதியான 31 மார்ச் 2019 வரை பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறாததுடன், இத் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டி ருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் நடாத்தப்படும் நடமாடும் சேவைகள் மற்றும் நேரடி அறவிடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் | கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட 121,000.00 இனை பெறுவதற்குரிய நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும். தகுந்த ஆவணங்கள் கிடைக்கப் பெறாமையினால் உரிய காலத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. |

1.3.3 நிகழத்தக்க பொறுப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிவரை உள்ளபடியாக சபையனாது 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் 02 வழக்குகள் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப் பட்டிருந்ததுடன், அது தொடர்பாக தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழத்தக்க பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | வெளித்தரப்பினரால் எமது சபைக்கு எதிராக தொடரப்பட்ட இரண்டு வழக்குக்கான சட்டத்தரணி கொடுப்பனவுத் தொகை எமக்கு முன் கூட்டியே தெரிவிக்கப்படாமை காரணத்தினால் நிகழத்தக்க பொறுப்பான கணக்குகளில் காட்டப்படவில்லை. |

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக உள்ள மின்சாரக் கடன்கள் ரூபா 781,370 தொகை தொடர்பில் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும், அவை தொடர்பான நிலுவைகளை அறவிட அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு அல்லது உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை கொண்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக நிலுவையாக வெளிப்படுத்தப்பட்டு வந்தபோதும் அத்தொகையை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக; கொண்டிருக்கின்றது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கடன் பெறுப்பாக காட்டப்பட்டுள்ள செலவுக் கடன் வழங்குனர் ரூபா 1,998,535 மற்றும் மின்சாரம் வினியோகித்த மைக்காக கடன் ரூபா 1,958,630 தொகைகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக இணங்கண்டு அவற்றை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு அல்லது அவற்றை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகைகள் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக நிலுவையாக வெளிப்படுத்தப்பட்டு வந்தபோதும் அத்தொகையை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) தகவல் சமர்ப்பிக்கப்படாமை

ரூபா 195,232,508 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரியதாக எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த செய்ய முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (i) காணிகளும் கட்டிடங்களும் | 47,632,607 | காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தங்களால் குறிப்பிடப்பட்ட கணக்காய்வுச் சான்றிதழ்கள் சில சமர்ப்பிக்கப்பட்ட போது சில சான்றுகள் பூரணப்படுத்தப்படாமல் காணப்படுவதால் அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) பொறி இயந்திரம் | 5,128,607 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iii) மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 22,922,155 | சொத்துப் பதிவேடுகள் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | | |
| (iv) மின்சார களஞ்சிய பொருட்களின் இருப்புக்கள் | 10,183 | இருப்புப் பதிவேடுகள் | | |
| (v) மின்சாரம் வினியோகித்தமைக்கான கடன்கள் | 1,958,630 | செலுத்த வேண்டிய பதிவேடு | | |
| (vi) குடிநீர் குழாய் இணைப்பு | 999,041 | மதிப்பீட்டு அறிக்கை, வேலை முடிவுறுத்தல் அறிக்கை மற்றும் பற்றுச்சிட்டை | | |

1.4 இணக்கமின்மைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) மற்றும் (2) ஆம் பிரிவுகள் மற்றும் உள்ளுராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் அமைச்சினது 1988 சனவரி 13 ஆம் திகதிய 488/16 ஆம் இலக்க வர்த்மான அறிவித்தலின் 31(1) ஆம் உப பிரிவு | பிரதேச சபைகளின் நடவடிக் கைகளை இலகுபடுத்தும் நோக் குடன் நிறைவான தீர்மானங் களையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்காக சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோ சனைகள் பெறப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை இக்குழுக்களை நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. | உரிய விதிகளுக்கமைய நிலையிற் குழுக்கள் அமைக்கப்பட்டடு அவை உரிய முறையில் செயற்படுத்தி ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | சபை உறுப்பினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நிலையியற் குழுக்களை ஸ்தாபிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. இக்குழுக்கள் 2019 ஆம் ஆண்டிலே ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்ப ட்டு வருகின்றது. |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவு | குறித்த சில உரிம தீர்வைகளை அறவிடுவதற்கு சபைக்குள்ள தத்துவத்தன் அடிப்படையில் ஒரு விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம் என்பற்றின் மீது அவ்வுரிமையாளர் பெற்றுக்கொள்ளும் பெறுதொகை களுக்கிணங்க ஒரு வீதத்தை விஞ்சதலுமான தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். இருந்தும், சபையினால் அறவிடப்பட்ட இவ்வரியானது பெற்றுக்கொள்ளப்பட்ட பெறு தொகைக்கு ஏற்ப கணக்கிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைச்சட்டம் 149 பிரிவுக்கமைய பெறுதொகைகளில் ஒரு வீதம் அறவிடப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | எமது பகுதியிலுள்ள விடுதி யகங்களில் பிரதேச சபைச் சட்டம் 149 க்கமைய பெறு தொகைகளில் ஒரு வீதம் எம்மால் அறவிடப்பட்டபோது அவர்களின் உண்மையான பெறுதொகையை இனங் காண்பது கடினமானதாக உள்ள போதும் தற்போது தங்களின் ஆலோசனைக் கமைய இறைவரித் திணை க்களத்தின் மூலம் தகவல் களைப் பெற்று அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் X இன் 193 பிரிவு | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப் பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கமைய செயற்படவேண்டும் | இவ் ஒப்பீட்டு ஆய்வு முறையானது வழமையாக இறுதிக்கணக்கறிக்கைகளில் பிரதிபலிக்கப்படுவதில்லை. 2019 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதியகணக்கு முறைமைக்கு அமைய தயாரிக்கப்பட்டு கணக்கறிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும். |
| (ஈ) 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிர்வாக சுற்றறிக்கை 09.⁚.2009 இன் ஐஏ பிரிவு | நேரத்தின் அடிப்படையில் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளங்கள் போன்ற நிரந்தர கடமை நேரத்திற்கு பின்னராக செலுத்தப்படும் படிகளின் விடயத்தில் நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அந்நேரத்தை விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டுமென கூறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும், உத்தியோகத்தர் ஒருவருக்கு உள்வருகை மற்றும் வெளிச் செல்கை கைவிரல் நேரப்பதிவினை விடுமுறை தினங்களில் பூர்த்தி செய்யாத நிலையில் சபையினால் ரூபா 39,343 தொகை விடுமுறைதினக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு முரணாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அதனை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | எமது சபையில் உள்ள விரலடையாள இயந்திரமானது 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரைக்கும் பழுதடைந்து காணப்படுகின்றது. தற்போது புதிய இயந்திரம் கொள்வனவு செய்ய கேள்வி கோரப்பட்டுள்ளது. அதன் பின்பு ஒழுங்கான நடைமுறை பின்பற்றப்படும். |

2. நிதிசார் மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,041,101 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,346,935 தொகையாக ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 4,694,166 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

2.2 வருமான நிர்வாகம்

------------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,500,000 | 1,957,592 | 1,957,592 | --- | 1,500,000 | 1,869,820 | 1,870,507 | --- |
| வாடகைகள் | 5,041,700 | 5,236,400 | 4,798,100 | 438,300 | 4,899,600 | 5,502,355 | 5,337,655 | 164,700 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,125,000 | 1,651,150 | 1,654,900 | --- | 1,090,000 | 1,409,200 | 1,409,200 | --- |
| ஏனைய வருமானம் | 15,176,000 | 17,521,280 | 18,985,007 | --- | 15,142,000 | 16,594,787 | 13,767,562 | 2,827,224 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### 2.2.2.1 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 140(1) உப பிரிவுகளுக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் 11 வட்டாரங்களிலுள்ள 27 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் வீதவரியை தற்காலிக வீதவரியை நிரந்தரமாக்குவதற்கும், அதன் மூலமாக சபையின் வருமானத்தை அதிகரிக்க முடியுமென சபையின் வருமானப் பரிசோதகர்களால் 2018 செப்டம்பர் 21 ஆம் திகதி முன்மொழியப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 மே 08 ஆம் திகதிவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | சபை தீர்மானம் எடுக்கப்பட்டு மக்களின் அபிப்பிராயம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள 27 கிராம சேவையாளர் பிரிவுகளில் 17 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 140(1) உப பிரிவுகளுக்கமைய விலை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்மானங்களுக்கு அமைய விலை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | 10 கிராமசேவகர் பிரிவுகளுக்கு ஆதன விலை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போது அறவிடும் வீதவரிக்கு சபை அனுமதி பெறப்படாமையால் அதை நடைமுறைப்படுத்த எமக்கு சட்ட சிக்கல் ஏற்பட்டதால் மிகுதிக்கு விலை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

### 2.2.3 ஏனைய வருமானம்

#### JCB இயந்திரத்தின் பயன்பாடு

தங்கள் பிரதேச சபையினால் உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் (LLDF) கீழ் கடன் மற்றும் சபை நிதியைக் கொண்டும் JCB இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்து சபையின் வேலைகளையும் தனிநபர்களுக்கு வாடகைக்கும்வழங்குவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்காக கொள்வனவு செய்து பயன்படுத்தி வருகின்றது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபையினால் இவ்வியந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி இன்மையால் சபையானது உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் கடன் பெற்று, [illegible] இயந்திரத்தை கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டு சபை நிதியில் ரூபா 2,300,000 தொகை மற்றும் கடன் நிதியின் மூலம் ரூபா 9,200,000 தொகையும் கொண்டு ரூபா 11,500,000 தொகைக்கு சபையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் இவ்வியந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், சபையானது இவ்வியந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் நட்டத்தையே எதிர்நோக்கியுள்ளது. | சபை வேலைகளுக்கான மணித்தியாலத்திற்குரிய பெறுமதிகள் கணப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்படவேண்டும் | செலவு ஆய்வின் அடிப்படையில் நட்டமாக அவதானிக்கப்பட்ட போதும் அவ்வாய்வில் சபை வேலைகளுக்கான மணித்தியாலத்திற்குரிய வருமானம் உள்ளடக்கப்படவில்லை. |
| (ஆ) பிரதேச சபைக்கு வருமானத்தை உழைக்கும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்ட இவ்வியந்திரத்தின் மூலம் பாவனை விபரங்கள் இன்றி சபை தனது வேலைகளுக்கென 271 இயந்திர மணித்தியாளங்கள் பயன்படுத்தியுள்ளதினால் சபைக்கு இச்சேவையை மூலம் ரூபா 813,000 தொகையை இழந்துள்ளது. | JCB வாகனம் உட்கட்டுமான பணி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது எனின், அவற்றின் விபரங்கள் வெளிப்படுத்த வேண்டும் | சபையின; Vision, Mission அடிப்படையில் சபையானது உட் கட்டுமான பணிகளை பொதுமக்களுக்கு செய்ய வேண்டியுள்ளது. அதன; அடிப்படையில; JCB வாகனம் உட்கட்டுமான பணி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |
| (இ) பிரதேச சபையானது மீளாய்வாண்டில் இவ்வியந்திரத்திற்கான பாவனை செலவுகளாக எரிபொருள், இயந்திர திருத்தம், சாரதி சம்பளம் மற்றும் இயந்திரத்தின் கடன் மீளச்செலுத்தல் என்பன அடங்கலாக அண்ணளவாக ரூபா 1,751,641 தொகை செலவிடப்பட்டுள்ளது. சபை இவ்இயந்திரத்தை பயன்பத்தப்பட்டதினால் ரூபா 557,835 தொகையை மாத்திரம் வருமானமாக உழைத்துள்ளது. | சபை வேலைகளுக்கான மணித்தியாலத்திற்குரிய பெறுமதிகள் கணப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்படவேண்டும் | சபையின் வேலைகளுக்காக இவ்வியந்திரம் பாவிக்கப்பட்டுள்ளதனால் இவ் மணித்தியாலத்திற்கான வருமானம் உள்ளடக்கப்படாமை நட்டமாக தென்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| இச்செயற்பாட்டினை ஆய்வு செய்தால் வருடாந்தம் சபையானது ரூபா 1,200,000 தொகையை அண்ணளவாக இழக்கவேண்டி ஏற்படலாம். | | |
| (ஈ) மீளாய்வாண்டில் இவ்வியந்திரம் தனியார் வேலைகளுக்கு, சபை வேலைகளுக்கு மற்றும் உயர் அதிகாரிகளால் விடுக்கப்படும் பணிப்புரைகளுக்கு அமைய பயன்படுத்தப்படுகின்ற போதிலும், கணிசமான நேரங்களில் மாத்திரம் தவிசாளர் மற்றும் செயலாளரின் அனுமதி பெறப்படுகின்றது எனைய நேரங்களில் எவ்விதமான அனுமதியுமின்றி குறித்த இயந்திரம் வேலைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ் இயந்திரத்தின் பயன்பாடுகள் தொடர்பான முறையான செயற்திட்டம், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் அறிக்கை தயாரித்தல் என்பன முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்படான உள்ளக முறைமை ஒன்று பின்பற்றப்படவேண்டும் | தற்போது இதற்கான தீர்வு வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டினூடாக சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம்

மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 904,516 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 14,135,196 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன.

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 904,516 தொகை நீதிமன்ற தண்டப்பணமானது 2017 யூன் தொடக்கம் திசெம்பர் வரைக்குமான நிலுவைகளாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு இறுதிவரைக்குமான நீதிமன்ற தண்டப்பணத்தை முழுமையாக | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | உள்ளுராட்சி ஆணையாளரே இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. |

பெறுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2019 மே 08 ஆம் திகதிவரை சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரை தீர்வைகள்

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அசைவற்ற ஆதனங்களின் கைமாற்றல்கள் மீதான முத்திரைத் தீர்வையை மட்டக்களப்பு மாவட்ட காணிப் பதிவாளர் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டு கிழக்கு மாகாண திறைசேரியின் வருமானவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வையை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்வது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தால், கிழக்கு மாகாண சபைகள் 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வரிகளையும் கட்டளைகளையும் விதிப்பதற்கும் சேகரிப்பதற்குமான நிதிநியதிச் சட்டத்தின் 37 ஆம் சரத்துக்கமைய பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் உள்ள அசைவற்ற ஆதனங்களை மாற்றுகையில் கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தினால் 2016, 2017 மற்றும் 2018 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நேரடியாகவும் நடமாடும் சேவைகள் மூலமாகவும் அறவிட்ட மேலதிக முத்திரை தீர்வை தொடர்பில் ஆதன உரிமையாளர்களால் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை, கணக்கிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் நடாத்தப்படும் நடமாடும் சேவைகள் மற்றும் நேரடி அறவிடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் | இது விடயமாக உரிய அதிகாரிகளுடன் கதைத்த போது எமக்கு எதுவித வரி மீளளிப்பும் வழங்கப்படமாட்டாது எனக் கூறினார்கள். |
| (ii) முத்திரை தீர்வையானது பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானமாகும். இருந்தும், 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தினால் மேலதிகமாக அறவிடப்பட்ட முத்திரை தீர்வை ரூபா 121,000 தொகை கணக்காய்வுத் திகதியான 31 | இனிவரும் காலங்களில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தி னால் நடாத்தப்படும் நடமாடும் சேவைகள் மற்றும் நேரடி அறவிடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் | இது விடயமாக உரிய அதிகாரிகளுடன் கதைத்த போது எமக்கு எதுவித வரி மீளளிப்பும் வழங்கப்படமாட்டாது எனக் கூறினார்கள். |

மார்ச் 2019 வரை பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்பட்டிருக்கவேண்டும். இருந்தம், பிரதேச சபையினால் 08 உபவிதிகள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டும், 06 உபவிதிகள் தொடர்பில் 2013 ஆம் ஆண்டும் மேலும் 04 உபவிதிகள் தொடர்பில் 2017 ஆம் ஆண்டும் தயாரிக்கப்பட்டு சபையினால் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் கிழக்கு மாகாண உள்ளுராட்சி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2018 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | மூன்று மொழிகளிலும் உப விதிகள் தயாரிக்கப்பட்டு உரிய அனுமதிக்காக உள்;ராட்சி மாகாண அமைச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் (தற்போது 5 உப விதிகளுக்கான) தற்போதைய சபையின் தீர்மானம் கோரி வந்துள்ளது. |

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 18 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்பட்டிருக்க வேணடும். இருந்தும், அனுமதி பெறவதற்காக தயாரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 18 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படத்த வேணடும். | தங்களது ஆலோசனைகளுக்கமைய 18 செயற்பாடுகள் தொடர்பில் எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். |

(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2016 - 2020 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக உள்ளுராட்சி மன்றத் திற்கான 4 வருட அபிவிருத்தி திட்டம் ஒன்று (LAPDP) சபை நிதி மற்றும் கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை திட்ட நிதி என்பவற்றை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத் தப்பட்டிருக்க வேண்டிய 310 செயற்பாடுகளில் மீளாய்வாண்டில் 34 செயற்பாடுகள் மாத்திரம் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதி வளத்தினை கருத்திற் கொண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | நான்கு வருட அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்த போதுமான அளவு நிதியின்மை காரணமாக ஒரு சில அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிதி வளத்தினை கருத்திற் கொண்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாணடில் சபையினால் 02 இறைச்சி கடைகள் மற்றும் 02 சில்லறைக் கடைகள் ஆகியன நிர்மானிப்பதற்காக மொத்தமாக ரூபா 709,686 தொகைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 710,000 தொகை செலுத்தப்பட வேண்டியதாக காட்டப்பட்டுள்ளது. இருந்தும், சபையினால் அவற்றை நிர்மானிப்பது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுத்திருக்கவில்லை. | துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு காணிகளை இனங்கண்டு கடைகளை நிர்மானிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். | இக் கடைகளை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் குறித்த காணிகளைப் பெறுவதில் ஏற்பட்ட சிரமம் காரணமாக கடைகளை நிர்மாணிக்க இயலவில்லை. மேலும் நடவடிக்கை எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். |

(உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

திண்மக் கழிவு முகாமைத்தும் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் குறுங்கால செயற்திட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 4,752,654 தொகை செலவினம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சபையின் வருமானமாக ரூபா 1,152,040 தொகை பெறப்பட்டுள்ளது. இவ் திண்மக் கழிவு முகாமைத்தவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திண்மக் கழிவு முகாமைத்தும் தொடர்பில் சபையினால் நீண்டகால மற்றும் குறுங்கால செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் புதிய திட்டங்கள் முன்மொழியப்பட்டு தேவையான சாரதிகள், திண்ம கழிவுகளை சேகரிப்பதற்கான வாகனங்கள், சுகாதார தொழிலாளிகள் போன்றவற்றை அதிகரித்தல் மற்றும் கிராமங்களில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குழுக்களை உருவாக்கி அதன் ஊடாக திண்மக்கழிவு முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் குறுங்கால, நீண்டகால திட்டங்களை செயற்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளல். | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையில் குறுங்கால, நீண்டகால திட்டங்கள் உள்ள போதும் அது செயற்படுத்தப்படாமல் உள்ளது. திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு என தற்காலிக ஆளணியினரை நியமித்ததுடன் வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து குப்பைகளை | புதிய திட்டங்களை அறிமுகம் செய்து அவற்றை நடைமுறைப் படுத்தல் | மேலதிக குப்பைக்கு வரி அறவிடும் நடைமுறையுள்ளது. அத்துடன் ஒருங்கிணைந்த |

| | | |
|---|---|---|
| தரம்பிரித்து சேகரிக்கின்ற பணிகள் மக்களின் அசட்டையீனம் மற்றும் கவலையீனம் காரணமாக முழுமையாக செயற்படாத காரணத்தினால், திண்ம கழிவு முகாமைத்துவத்தினால் சேதன பசளை உற்பத்தி மற்றும் மிள்சுழற்சி விற்பனை போன்ற திட்டங்களை மாத்திரம் செயற்படுத்தி வருகின்றது. இருந்தும், இவற்றை தவிர வேறு வகையில் வருமானத்தை உருவாக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட்டிருக்கவில்லை. | | பண்ணையினை ஸ்தாபிப்பதற்கு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (இ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், நிறுவனங்கள், கடைகள் மற்றும் பொது இடங்களில் இருந்து குப்பைகளை சேகரித்து தேசன பசளைகளை உற்பத்தி செய்து உற்பத்திகளை விரிவுபடுத்துவதற்காக உக்கக்கூடிய கழிவுகளை துகள்களாக அரைக்ககூடிய இயந்திரங்கள், வாழைமரங்களை அரியும் இயந்திரங்கள் மற்றும் கழிவுகளை தரப்படுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்து பயன்படுத்தினால் வருமானத்தை அதிகரிக்க கூடியதான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் புதிய திட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுதல் வேண்டும். | எதிர்காலத்தில் புதிய திட்டங்கள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிராகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(i) கடமைப்பட்டியல்

| அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் படி 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டிய சபையில் கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் பணிபுரிவதற்காக 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதில் வினைத்திறனின்மையற்றவர்களக காணப் படுகின்றனர். இதனால் பொதுமக்களுக்கும் சபைக்கும் துரிதமாக பணிகளை முன்னொடுத்துச் செல்லமுடியாதுள்ள நிலைகாணப்படுகின்றது. | உரிய உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை வழங்கப்பட்ட கடமைப்பட்டியல்களுக்கு அமைய செயற்படுத்துகின்றனர்களா என மேற்பபார்வை செய்தல் சிறந்தது. | தங்களால் குறிப்பிட்டவாறு வினைத்திறன் இன்மைக்கு காரணம் குறிப்பிட்ட விடயத்தில் போதியளவான பயிற்சி வழங்கப்படாமையே காரணமாகும். அத்துடன் இவர்களில் சிலர் புதிதாக இடமாற்றம் பெற்று வந்தவர்களாக உள்ளனர். |
| (ஆ) சபையின் கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் பணிபுரிவதற்காக 05 முகாமைத்துவ உதவியாளர்கள் காணப் படுகின்ற போதிலும், இவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைப்பட்டியல்களில் 60 % சதவீதமான வேலைகளே நிறைவேற்றப் படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உரிய உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை வழங்கப்பட்ட கடமைப்பட்டியல்களுக்கு அமைய செயற்படுத்துகின்றனர்களா என மேற்பபார்வை செய்தல் சிறந்தது. | இங்கு கடமை புரியும் 5 முகாமைத்துவ உதவியாளர்களும் வேறு திணைக்களங்களில் கடமை புரிந்து இடமாற்றம் பெற்று புதிதாக வந்தவர்கள். இவர்களின் வினைத்திறனை அதிகமாக்க முறையான பயிற்சிகள் வழங்கப்படும். |
| (இ) சபையில் உள்ள உள்ளுராட்சி உதவியாளர் திட்டமிடல் பிரிவுக்கு பொறுப்பாக இருப்பதுடன் சபையின் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகள், புதிய வருமானங்களை திரட்டுவது சம்பந்தமாக ஆய்வுகளை நடாத்தி அறிக்கை சமார்ப்பித்தல், சுற்றாடலை மாசுபடுத்தும் நிறுவனங்கள் சம்பந்தமான அறிக்கைகளை சமார்ப்பித்தல் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை இனங்கண்டு அதனை நிறைவேற்றக்கூடிய சாத்தியக்கூறுகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்தல் போன்ற முக்கியமான பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் காணப்படுகின்றமை அவதானிக் | உரிய உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை வழங்கப்பட்ட கடமைப்பட்டியல்களுக்கு அமைய செயற்படுத்துகின்றனர்களா என மேற்பார்வை செய்தல் சிறந்தது. | உள்;ராட்சி உதவியாளர் அவரது கடமையில் ஓரளவு தாமதம் இருப்பதை எம்மாலும் உணரக் கூடியதாக இருக்கின்றது. |

| | | |
|---|---|---|
| கப்பட்டது. இதனால் சபையின் மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்திகளில் மந்தநிலை காணப்படும். | | |
| (II) உள்ளூராட்சி மன்றங்களில் இணைக்கப்பட்டுள்ள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கள் கடமைகளின் நிமித்தம் சன சமூக நிலையங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து பிரதேச சபைகளுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். இருந்தும், மண்முனைப் பிரதேச சபை பிரிவுக்குள் 24 சன சமூக நிலையங்களில் 20 சன சமூக நிலையங்கள் மாத்திரம் இயங்குவதுடன் 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் அனைத்தும் செயலற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | பிரதேச சபை பிரிவுக்குள்ள சன சமூக நிலையங்கள் இயங்குவதற்கு முறையான திட்டங்களை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தல் | சனசமூக உத்தியோகத்தர்களுக்கு இது சம்மந்தமாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (III) சபையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் பேணப்பட்டுவருகின்ற லீவு பதிவேடுகளை கணக்காய்வு செய்த போது அவ் ஊழியர்களின் லீவுப் பதிவேடுகளில் காலகடந்த லீவுகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் ஒரு உத்தியோகத்தரின் காலம் கடந்த லீவுகள் தொடர்பான தகவல்களை உடன் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. | விடுமுறை சம்மந்தமாக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையினை பேண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்தகால விடுமுறை சம்மந்தமாக ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முறையைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.3 மனிதவள முகாமைத்துவம்

(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (ii) சபைக்கு தேவையான வேலைத் தொழிலாளிகள் மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் 20 தொழிலாளர்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்த போதிலும், சபையனாது பதிலீட்டு அடிப்படையில் மேலும் 24 பேரை நியமித்துள்ளது. | சபைக்கு தேவையான வேலைத் தொழிலாளிகள் மற்றும் சுகாதாரத் தொழிலாளிகள் தொடர்பில் முறையான ஆளணி திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். | சபைக்கு அறிவிக்கப்பட்ட வேலைத் தொழிலாளர்கள், சுகாதாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 20 ஆகும். அதில் அதிகமானவர்கள் பெண்கள். இதனால் அவர்களை திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டிற்கு அனுப்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேலதிகாரியின் அனுமதி |

கடிதத்தின் மூலமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், 2017 மற்றும் 2018 யூன் மாத இறுதி வரைக்குமான காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 550,994,583 தொகையில் வரியாக ரூபா 5,509,945 தொகையை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | காணிகளின் விற்பனை வரியை அறவிட தங்களது ஆலோசனைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும். போதிய விளக்கமின்மை காரணமாக இதனை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. |
| (ஆ) வீதிகளில் நடமாடும் கட்டாகாலி கால்நடைகளினால் வீதிகளில் பயணிக்கின்ற பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். இதனால் அக் கால்நடைகளை கைப்பற்றி அத்தொல்லை களில் இருந்து நீக்குவதற்கும், வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்குமாக மீளாய்வாண்டில் சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டு அதற்கென குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 திகதிவரை இது தொடர்பாக நடவடிக்கைகள் முன்னேடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும் | சபை தீர்மானத்திற்கு அமைய சபை உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட பொறுப்பு பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அவர்களினால் நடவடிக்கை மேற்கொள் ளப்படவில்லை. |
| (இ) மீளாய்வாண்டில் நடைபெற்ற சபைக்கூட்டங்களில் சபைக்கு சொந்தமான கடைத்தொகுதிகளை திருத்துவதற்கும் புதிதாக இறைச்சிக்கடைகளை நிர்மாணிப் பதற்காகவும் தீர்மானங்கள் மேற்கொள் ளப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 திகதிவரை இது தொடர்பாக ஆரம்பக்கட்ட நடவடிக் கைகள் கூட இதுவரையில் முன்னேடுக்கப் பட்டிருக்கவில்லை. | காணிகளை அடையாளம் கண்டு கடைகளை நிர்மானிப்பதற்கு நடவடிக்கப்படவேண்டும் | இறைச்சிக்கடை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் காணிகள் அடையாளப்படுத்தப்பட ாமை காரணமாக அதனை பூர்த்தி செய்ய முடியவில்லை. தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டில் நடைபெற்ற சபைக்கூட்டங்களில் சபை அங்கத்தினர் களால் பிரதேச சபையின் அபிவிருத்தி மற்றும் மக்களின் நலன் என்பவற்றை கவனத்தில் கொண்டு பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள் ளப்படுகின்ற போதிலும், அத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான போதிய முன்னேடுப்புக்கள் மற்றும் மேற்பார்வை இன்மையால் இத்தீர்மானங்கள் வேறுமனே எழுத்துவடிவம் பெற்றதாக காணப்படுகின்றது. | தீர்மானங்களக்கு எற்ப நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுதல் | சபை உறுப்பினர்களுக்கு இடையே ஒருமித்த தன்மையின்மை காரணத்தினால் முன்மொழியப்பட்ட திட்டங்கள் உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த சிக்கல்கள் காணப்படுகின்றன. |

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 48,780,712 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | நிலையான சொத்துக்களின் உண்மைப் பெறுமதியை அறிந்து நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3.5.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையில் பல்வேறுபட்ட சொத்துக்கள் மற்றும் இருப்பு பொருட்கள் பாவனைக்கு உகந்த மற்றும் பாவனைக்கு உதவாத பொருட்கள் என பலவகையான பொருட்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை அடையாளப்படுத்தி திருத்துவதற்கு அல்லது கழித்து விடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாததுடன், இவ்வாறாக திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய பொருட்களை ஒழுங்குபடுத்தி பாதுகாப்பான முறையில் வைப்பதற்கான | திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் . | பொருட்கணக்கெடுப்பின் போது இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள இவ்வருடம் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.5.3 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகத்தர்கள் அடங்கிய மெய்மையாயவுக் குழுவினால் மெய்மையாய்வு செய்யப்பட்டது. இவ் மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வானது 2018 திசெம்பர் 31 ஆம் திகதியை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், இத் திகதிக்கு பின்னர் நடைபெற்ற பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்கள்ல்கள் தொடர்பில் சீராக்கங்கள் செய்யப்பட்டு இறுதி பொருள் இருப்பு கணிப்பிடப்படவேண்டிய போதிலும், இச்செயற்பாடுகள் தொடர்பில் கணிப்பிடுகள் கவனத்தல் கொள்ளப்படாது இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சட்ட எற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

3.6 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையிலுள்ள EP PB 1184 இலக்கமுடைய பிக்கப் வாகனத்திற்கு ரூபா 221,112 தொகைக்கு 2,327 லீற்றர் எரிபொருள் நிரப்பப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தள்ளது. இருந்தும், இவ்வாகனப்பானை தொடர்பான வாகன ஒட்டப்பதிவேடு கணக்காய்வுத் திகதியான 2019 ஏப்பிரல் 30 திகதிவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சட்ட எற்பாடுகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | EPPB/1184 இலக்க பிக்கப; வாகனத்திற்கான ஓட்டப்பதிவேடு தவறுதலாக வேறு இடத்தில் வைக்கப்பட்டுள்ள தாக சாரதியால் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாரதியிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. |

3.7 பெறுகை

3.7.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக் கப்பட்டிருக்க வேண்டும். இருந்தும், சபையினால் வழங்கல்களுக்காக ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்காததுடன், சேவைகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்ளூராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளின் உள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை திட்டம் தொடர்பான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய பெறகைகள் திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். | பெறுகை திட்டமானது இவ் ஆண்டில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் உள்;ராட்சி உதவியாளருக்கு இது சம்மந்தமாக அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளது. |

3.7.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் சபை நிதியில் ரூபா 1,842,450 தொகைக்கு 642 கியூப் கிறவல் கொள்வனவவு செய்யப்பட்டு சபைத் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் வட்டார பகுதிகளில் உள்ள வீதிகளை செப்பனிடும் பொருட்டு கிறவல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட போதிலும், இக் கிறவல்கள் உரிய வீதிகளில் இடப்படுவதற்கு முன்னர் சபையினால் தெரிவுசெய்யப்பட்ட முறைமை, மதிப்பீடு, சபை அனுமதி மற்றும் கிறவல்களின் கொள்வனவு முறைமை என்பனவும் இக்கிறவல்கள் உரிய | ஆவணங்கள் மற்றும் கோவைகள் கணக்காய்வுக்கு உரிய காலத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். | கிறவல் கொள்வனவிற்கான சபை அனுமதியும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீட்டு அறிக்கையும் பெறப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன். மேலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வேலை நிறைவு அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| விதிகளில் இடப்பட்டமை தொடர்பான அறிக்கைகள் இன்றி கொடுப்பனவகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | | |
| (ஆ) மீளாய்வாண்டில் குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள தாழங்குடா வேடர்குடியிருப்பு பகுதியில் குடிநீர் குழாய்களை பொருத்தும் நோக்குடன் ரூபா 1,000,000 ஒதுக்கப்பட்டு மட்டக்களப்பு பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 999,041 தொகை வழங்கப்பட்டபோதிலும், சபையினால் இத்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டமை தொடர் பான சான்றுகள் மற்றும் ஆவணங்கள் சபையினால் கணக்காய்வுக்கு சமார்ப்பிக்கப் பட்டிருக்காததுடன், இத்திட்டத்தினை சபையின் பொறுப்புள்ள உத்தியோகத் தார்களால் அவை மேற்பார்வை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியினை கையாளும் பொறுப்பு பிரதேச சபையிடம் உள்ளதாலும், மக்களின் தேவை கருதி சபையினால் முன்னேடுத்த திட்டம் என்பதால் அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு சபையுடையாதாகும். | மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் தாழங்குடா வேளர் குடியிருப்பு பகுதியில் குடிநீர்குழாய்கள் அமைக்கும் வேலையை முழுப்பொறுப்பும் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பே என்பதை அறியத் தருகின்றேன். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 15(1) உப பிரிவிற்கமைய நிதிக்கூற்றுக்களை அரசாங்கத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும், இதற்கமைய, 2019 ஏப்பிரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்தும், 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018ம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) உப பிரிவுக்கமைய செயற்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் நிதிக் கூற்றுக்கள் உரிய காலத்திற்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு 2018 ஜனவரி தொடக்கம் யூன் மாதம் வரையான காலப்பகுதிக்கான உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டு முகாமைத்தவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், அவ்வறிக்கை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு பொது 172 பற்றுச்சிட்டு கணக்காய்வுக்கு சமார்ப்பிக்கப்பட வேண்டும் | உள்ளகக் கணக்காய்வு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவுக்கு நிதி உதவியாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) உள்ளக கணக்காய்வு தொடர்பான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், அச் திட்டங்களின் அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு செயற்திட்டம் நடைமுறைப்படுத் தப்படவேண்டும் | உள்ளகக் கணக்காய்வு செயற்திட்டத்தில் உள்ள விடயங்கள் இவ் வருடத்தில் சீர்செய்யப்படும். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் நடைமுறைப்படுத் தப்படவேண்டும் | 2019 ஆம் ஆண்டில் இதனது செயற்பாட்டை தொடர்ச்சியாக நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. |

4.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட எற்பாடுகளுக்கமைய | வருமான நிலுவைகளை அறவிடக் கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | | செயற்படுத்தப்பட வேண்டும் | கவனம் செலுத்தப்படும். |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்படும் போது கடந்த கால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். | சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட எற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும் | பாதீடு தயாரிக்கும் போது கடந்தகால உண்மையான செலவுகள் கவனத்தில் கொள்ளப்படும். |
| (இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br><br>(ii) சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுற்றறிக்கைகள் மற்றும் சட்ட எற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்பட வேண்டும் | நிலையான சொத்து பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>சபையில் பயன்படுத்தப்பட ாத சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |